# முயல்வோம் முன்னேற்ற பாதையில்

**மாணவர்களுக்கான வழிகாட்டி**
**கையேடு**



தொகுப்பு

**கவிஞர்.கோ.கணபதிசுப்பிரமணியன்**

என்றும் அன்புடன்

**டி.பி.எம்.மைதீன்கான்**

சுற்றுச்சூழல் அமைச்சர்.

தமிழ்நாடு அரசு

டி.பி.எம்.மைதீன்கான்
சுற்றுச்சூழல் அமைச்சர்.
தமிழ்நாடு அரசு

# வாழ்த்துரை

வெற்றி உங்கள் கையில்தான். விரல்கள் பத்தும் மூலதனம் தான். தளர்ச்சி இல்லாத நல்ல முயற்சி இருந்தால் விதியை வென்று குறிக்கோளை அடைய முடியும் அதிர்ஷ்டம், யோகம் போன்றவையெல்லாம் உன் கையில் ஒளிந்திருக்கிறது. உன் கையில் ஒளிந்திருப்பது உன் திறமையும், விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் மட்டுமே. எவ்வளவு தடைகள் வந்தாலும் அந்த தடைக்கற்களை எல்லாம் படிக்கற்களாக கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும். பன்னிரண்டாம் வகுப்பு என்பது வாழ்வில் ஒரு திருப்புமுனை.

தேர்வு நெருங்கிக்கொண்டு இருக்கிறது. கடமை அழைத்துக் கொண்டிருக்கின்றது. சிந்தாமல் சிதறாமல் ஒவ்வொரு மணித்துளி நேரத்தையும் பயன்படுத்தினால் நீங்கள் மனதில் எதை நினைக்கின்றீர்களோ அதை அடைய முடியும். தென்னகத்தின் ஆக்ஸ்போர்டாம் பாளையங்கோட்டை கல்வியில் சாதனைகள் படைக்க வேண்டும். சரித்திரம் நிகழ்த்த வேண்டும். நீங்களெல்லாம் பொறியியல் அறிஞராக, மருத்துவ நிபுணர்களாக, கணிப்பொறி வித்தகர்களாக, I.A.S, I.P.S போன்ற படிப்பில் வெற்றி பெற்று உயர் பதவியை அலங்கரிக்க வேண்டும். எல்லா வளமும் நலமும் பெற்று பாளை தொகுதியின் பெருமையைப் பறைசாற்ற உங்களை வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்

**அன்பார்ந்த மாணவச் செல்வங்களே**

**"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது"** என்றார் ஔவை பிராட்டி. அப்படிப்பட்ட மானிடப்பிறப்பு எடுத்த நாம் எப்படி வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளோடு வாழ்ந்து உயர்ந்த இலட்சியத்தை அடைய வேண்டும். இலட்சியத்தை அடைய ஒவ்வொருவருக்கும் கற்பகத்தருவாய், காமதேனுவாய், இருப்பது இளமை பருவம். அந்த இளமைப்பருவத்து மாணவச் செல்வங்கள் சரியான பாதையில் சரியான இலக்கை அடைய வழிகாட்டிடும் கலங்கரை விளக்காய் இந்த **"முயல்வோம் முன்னேற்றப் பாதையில்"** என்ற நூல் ஒளி வீசும் என்பதில் நம்பிக்கை உடையவன் நான். தமிழகஅமைச்சரவையில் முக்கிய நான்குதுறைகளை ஏற்றிருந்தும் எளிமை இனிமை இவற்றின் இருப்பிடமாய், பண்பு , பணிவு இவற்றின் பிறப்பிடமாய் திகழ்ந்து தொகுதி மாணவர்களின் நலனில் அக்கறைக்கொண்டு மாணவச் செல்வங்கள் வாழ்வில் ஒளியேற்றும் தமிழகசுற்றுச் சூழல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம் அமைச்சர் **மாண்புமிகு டி.பி.எம்.மைதீன்கான்** அவர்களை பாராட்டி மகிழ்கிறேன். மாணவச் செல்வங்கள் சாதனை படைக்க வென்று காட்டுவோம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திடும் நிலையை நினைத்து மகிழ்கிறேன். இந்த புத்தகம் வெளியிட உதவிய பேராசிரியர் வே.ஆனந்தன், முன்னாள் சுழற்கழக தலைவர்.அ.பாலசுப்பிமணியன் ஆகியோருக்கு நன்றியை உரித்தாக்குகிறேன். மாணவச் செல்வங்களே இந்நூல் படித்து, பாதை வகுத்து, பாரினில் பவனி வர வாழ்த்துகிறேன். நினைப்போம்; நடப்போம்; சரித்திரம் படைப்போம்.

***விழுந்தால் விதையாக வேண்டும்.***

***எழுந்தால் மரமாக வேண்டும்.***

என்றும் அன்புடன்

*கவிஞர் கோ.கணபதிசுப்பிரமணியன்*(தொகுப்பாசிரியர்).

3

**பெற்றோர்கள் கவனிக்க ....**

"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற கவிஞனின் பாடல்கள் உண்மையை பிரதிபலிக்கின்றது. அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம், தந்தையிடம் நீ அறிவை வாங்லாம். இரண்டும் வாங்கினால் நற்பெயரை வாங்கலாம். நற்பெயரை வாங்கி புகழ் பெற வழிகாட்டும் ஒளிவிளக்குகள் பெற்றோர்கள். உடலையும், உள்ளத்தையும் பண்படுத்தி, பதப்படுத்தி, பக்குவப்படுத்தி பயன் விளையும் விதத்தில் உருவாக்குகின்ற ஆற்றல் பெற்றோர்களுக்குத்தான் உண்டு. அந்த பெற்றோர்கள் குழந்தைகளின் அளவு கடந்த பற்றும் நம்பிக்கையும் கொண்டு திகழ வேண்டும். அந்த குழந்தைகள் நல்வழி நடப்பதற்கு தாங்கள் முதல் வழிகாட்டியாக திகழ வேண்டும். அன்பு நிறைந்த குடும்பத்தில் தான் பண்பு நிறைந்த குழந்தைகள் உருவாகுகிறார்கள். அன்பு கிடைக்காத குழந்தைகள்தான் வழி தவறி விடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் குழந்தைகளுடன் சிறிது நேரமாவது செலவிட்டு, அவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு, உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் குழந்தைகளுக்கு முன் பெற்றோர்கள் வீண் விவாதத்திலோ, சண்டைசச்சரவுகளிலோ ஈடுபடக்கூடாது. குழந்தைகளை புகழுங்கள்; வாழ்த்துங்கள்; அவர்களின் வளர்ச்சிக்காக ஆண்டவனிடம் வேண்டுங்கள். மாணவர்கள் படிப்பதற்கு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்களாகிய நமது கடமை. அதிகமான நேரம் படிக்கும் படி அவர்களை கட்டாயப்படுத்தக் கூடாது. அவர்கள் சுதந்திரமாக படிக்க

அனுமதிக்க வேண்டும். அவர்கள் களைப்பாக இருக்கும் நேரத்தில் புத்துணர்ச்சியூட்டும் பால் போன்ற சத்தான ஆகாரங்களால் உற்சாகப்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இதர மாணவர்களோடு ஒப்பீடு செய்து சுட்டிக்காட்டக்கூடாது. தொலைக்காட்சியில் கேளிக்கை நிகழ்ச்சிகளை பார்க்காமல் குழந்தைகளுக்காக தியாகம் செய்ய வேண்டும்.

## குறிக்கோள்

வாழ்க்கையில் வெற்றி ஒன்றே இலக்காக இருக்க வேண்டும். பிறந்தோம்; இருந்தோம் என்று இல்லாமல் சாதித்தோம்; சரித்திரம் படைத்தோம் என்று திகழ வேண்டும். அதற்கு அடிப்படை மனதிலே குறிக்கோள் ஒன்று இருக்க வேண்டும். அந்த குறிக்கோளை இடையறாது முயற்சி செய்யவேண்டும். சோர்வின்றி இடையறாது முயற்சி செய்தால் விதியையும் வென்று விடலாம் என்று வான்புகழ் கொண்ட வள்ளுவனார்.

*ஊழையும் உப்பக்கம் காணபர் உலைவின்றித்*

*தாழாது உஞற்று பவர்.*

என்று குறிப்பிடுகின்றார்.

## ஆளுமைத்திறன்

ஆளுமையே ஒரு மனிதனை உயர்த்தும். ஏணிப்படியாகும். ஒழுங்கு, கட்டுப்பாடு, நட்புணர்வு, கடமையுணர்வு கொண்டு நல்ல உடல்நலம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஆளுமை திறன் அதிகரிக்கும். மனச்சோர்வின்றி நல்ல சுய முன்னேற்ற நூல்களை ஆழ்ந்து படிக்க வேண்டும். மொழித் தொடர்பு இருந்தால்தான், அதாவது, இலக்கியத்தை ரசிக்கின்ற தன்மையை உணர்ந்தால் மனச்சோர்வு

ஏற்படுவதை தவிர்க்க முடியும். நல் எண்ணச் சிந்தனை, குறித்த நேரத்தில், குறித்த காலத்தில் குறித்த வேலையை செய்து முடிக்கின்ற கால நிர்ணயம் தன்மையும் நம்மை நாமே என்னப்பணி என்று கட்டளையிட்டு மனதை கையகப்படுத்தி செயல்படுத்துகின்ற ஆற்றலை பெற வேண்டும். நல்ல செய்கைகள் பயம் இல்லாத தன்மை, நகைச்சுவை உணர்வு, சமயோஜித புத்தி இவை அதிகமாக மிளிர வேண்டும். கண்டிப்பாக ஓய்வு என்பது இன்றியமையாத ஒன்று. சுய பரிசோதனை செய்து நம்மை நாமே புரிந்து கொள்ள கூடிய தன்மையை உருவாக்க வேண்டும் இவைகளை செய்தால் ஆளுமை நம்மை ஆளும்.

## தேர்வில் வெற்றி அடைய....

மாணவச் செல்வங்களே, +2வில் எடுக்கும் மதிப்பெண்கள் அடிப்படையில் தான் ஒருவருடைய வாழ்வு அமைகின்றது. ஒரு மதிப்பெண், இரண்டு மதிப்பெண்கள் கூட குறைவாக எடுத்திருந்தால் வாய்ப்புகள் தட்டி போவதுண்டு. ஆகவே கவனமாக தேர்வில் வெற்றி பெற சில யோசனைகள்

## படிக்கின்ற நேரம்

பொதுவாக படிக்கின்ற நேரம் மாலையில் தொடங்கி இரவு பத்துமணி வரை படிக்கலாம். அதே போல் அதிகாலையில் 4.30 மணி முதல் 6.00மணி வரை எழுந்து படிக்க வேண்டும். இந்த அதிகாலை வேளையில் தான் நம்முடைய மூளை புத்துணர்வுடன் இருக்கும். அந்த வேளையில் எதைப் படித்தாலும் பசுமரத்தாணி போல் பதிந்து விடும். மாலையில் எதைப் படிக்க வேண்டும். காலையில் எதைப்படிக்க வேண்டும் என்று நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். கடினமான கணிதம், வேதியியல்,

உயிரியல், இயற்பியல் போன்றவற்றை காலையில் படிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக எழுதிப் பார்த்து திரும்ப திரும்ப படிக்கவேண்டும். இப்படி செய்தால் மனதில் ஆழமாக பதிந்து விடும். இப்போது அதிகஅளவில் ஒரு மதிப்பெண் வினா இடம்பெறுகிறது. பெரும்பாலான மாணவச் செல்வங்கள் ஒவ்வொரு புத்தகத்துக்கும் உரிய உரைநூல்களை படித்தே தேர்வு எழுதுகிறார்கள். பாடப்புத்தகத்தின் உள்ளே இருந்து ஒரு வினா கேட்கப்பட்டால் பலரால் சரியான பதில் எழுத முடியாமல் தவிக்கின்ற நிலை இன்று எழுகின்றது. இதை போக்க வேண்டும் என்று சொன்னால் புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

சத்தமாக படிக்கும் போது கண்கள் புத்தகத்தை பார்க்கின்றது. காது வார்த்தைகளை கேட்கின்றது. இப்படி இருவழிகளிலும் பாடம் மனதில் பதிகின்றது. அதேபோல் சத்தம் போடாமல் மனதிற்குள் படிக்கும் படிப்பு அமைதியாக மனதில் பதிய வழிவகுக்கிறது.சூத்திரத்தை மற்றும் வாய்ப்பாடுகளை பல வண்ண அட்டைகளில் எழுதி படிக்கின்ற அறையில் பார்வையில் தெரிகின்ற அளவில் தொங்க விடவேண்டும். அடிக்கடி கண்கள் பார்த்து பார்த்து மனதில் அப்படியே ஆழமாக பதிந்து விடும்.

## குழு படிப்பு

தனியாக அமர்ந்து படித்தால் சிலரால் அரைமணிநேரம் கூட படிக்க இயலாது. இப்படி நிலையிருந்தால் அந்த மாணவச் செல்வங்கள் தன்னையொத்த, படிக்கின்ற நண்பனை தன்னோடு சேர்த்து ஒரு பாட அலகை தான் படித்து அவனுக்கு சொல்லிக் கொடுக்கவும், அவன் ஒரு பாட அலகை படித்து சொல்லிக் கொடுக்கவும் செய்து மாறி மாறி படித்து மனதில் பதியவைத்துக் கொள்ளலாம். நடந்து கொண்டு படிக்கக்கூடாது.

நான்கைந்து மாணவர்கள் ஒன்றாக இணைந்து ஒரு பாட அலகை ஒருவர் நடத்த மற்றவர்கள் கேட்டு புரிந்து கொள்ளலாம். ஒரு அலகில் உள்ள பாடங்களை வினாடி வினா முறையில் தெரிந்து கொள்ளலாம்.

## தேர்வை அணுகும் முறை

தேர்வு என்று சொன்னால் முதலில் வருவது பயம் தான். பயத்தை நீக்கினால்தான் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைக்க முடியும். பதறிய காரியம் சிதறும் என்பது மூத்தோர் முதுமொழி. ஆகவே பதறாமல் தேர்வுக்கு செல்ல வேண்டும்.

## கவனிக்க வேண்டியவை

தேர்வு தொடங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக தேர்வு கூடத்திற்கு செல்லவேண்டும். தேர்வு நாட்களில் இருசக்கர வாகனங்களில் செல்லாமல், பேருந்து போன்ற பாதுகாப்பான வாகனங்களில் செல்ல வேண்டும். தாமதமாகவோ பரபரப்பாகவோ சென்றால் அந்த தேர்வு சரிவர எழுத இயலாது. அதே போல் தேர்வு அறைக்கு சென்ற பின் புதிதாக எதுவும் படிக்கக் கூடாது. அருகில் உள்ள மாணவர்கள் இந்த வினா வருகிறது. அந்த வினா கேட்டுள்ளார்கள் என்று சொன்னாலும் புதிதாக எதையும் படிக்காமல் நாம் படித்ததை மனதிற்க்குள் மீண்டும் ஒரு முறை சுழலவிட வேண்டும். தேர்வுக்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் வீட்டில் வைத்தே சரியாக இருக்கிறதா என்று ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். கூடிய வரை இரண்டு பேனாக்கள் வைத்து கொள்வது நல்லது. ஒன்று எழுதாமல் போனால் இன்னொன்றை வைத்து எழுதிக் கொள்ளலாம்.

**தேர்வு எழுதுவது எப்படி?**

முதன்முதலாக வினாத்தாள் வாங்கியவுடன் விடை எழுதக் கூடாது. வினாத்தாள் வாங்கி முழுக்க வாசித்து மிகத் தெரிந்த வினாவிற்கான விடையை முதன் முதலில் எழுத வேண்டும். ஏன் என்று சொன்னால் திருத்துகின்ற தேர்வாளர் முதல் பக்கத்தை வாசிக்கும் போது நன்றாக படிக்கும் மாணவன், மாணவி என்று மனதில் நல்ல எண்ணம் ஏற்படும். இது அடுத்த பக்கங்களில் வரும் வினாக்களுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்க வாய்ப்புண்டு. "Frist impression is the best impression" என்ற வாக்கியத்திற்கிணங்க மிகத் தெளிவாக நிறுத்தி முதல் பக்கத்தை எழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிடை முடிந்தவுடன் கோடு இட வேண்டும். விடையில் சரியான வார்த்தைகளுக்கு அடிகோடிட்டு திருத்துபவர்களுக்கு எளிமைப்படுத்த வேண்டும். வினாக்களுக்கெல்லாம் சரியான எண் குறிக்கப்பட்டிருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஒருவினா எழுதிக் கொண்டிருக்கும் போது இடையில் தெரியாமல் போனால் அப்போது சிந்தித்துக் கொண்டிருக்காமல் சிறிது இடைவெளி விட்டு விட்டு வேறு வினாவிற்கு விடையளிக்க தொடங்கி விடவேண்டும். அனைத்து வினாவிற்கும் விடையளித்துவிட்டு மீண்டும் இடைபட்ட வினாவிற்கான விடைய எழுதி நிறைவு செய்ய வேண்டும். அனைத்து விடைத்தாள்களிலும் பக்க எண் இட்டு எழுத வேண்டும். அப்போதுதான் நிறைவாக எடுத்து கட்டும் போது எளிதாக இருக்கும். எந்த தவறான ஒழுங்கினமான செயல்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

### உணவு பழக்கம்

தேர்வு நேரங்களில் பொரித்த உணவுகளை கண்டிப்பாக உட்கொள்ளக்கூடாது. நல்ல அவித்த உணவுகள் இட்லி போன்றவற்றை சாப்பிடுவது நல்லது. நல்ல கலோரி அதிகமான புரோட்டின் சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடவேண்டும். தண்ணீரை கொதிக்க வைத்து அருந்த வேண்டும். குளிர்ந்த ஆகாரங்கள் சாப்பிடாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் சளி, காய்ச்சல் போன்ற தொந்தரவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

### தேர்வு எழுதிய பின்

விடைத்தாள் கிடைத்தவுடன் ஏன் இந்த விடைக்கு முழுமதிப்பெண் கிடைக்கவில்லை என்று ஆசிரியரிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். தவறான விடைகளுக்கு சரியான விடையை புத்தகத்தை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அரசு தேர்வில் தேர்வு எழுதிய பிறகு அதைப்பற்றி சிந்திக்க கூடாது. அப்படி சிந்தித்தால் மற்ற தேர்வுகள் பாதிப்பு ஏற்படும்.

### இதற்கு பிறகு என்ன படிக்கலாம்...

இன்று கல்வி என்பது விரிந்து பரந்த கடல்போன்ற பெரும் பரப்பை உடையதாக வளர்ந்து இருக்கிறது. +2 படிப்பிற்கு மேல்தான் உங்கள் வாழ்க்கையின் தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. எனவே +2 தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவது அவசியமாகும். பின் நீங்கள் தேர்வு செய்ய இருக்கும் துறை உங்கள் வாழ்க்கையை வளப்படுத்துவதாக அமையும். கல்லூரி அளவில் நீங்கள் படிப்பதற்கு ஏராளமான துறைகள் இருக்கின்றன. உதாரணமாக மருத்துவம் பொறியியல், சட்டம் வேளாண்மை

கால்நடைஅறிவியல் கடல்சார் தொழிற் நுட்பங்கள் மனையியல் உயிரியல் சார்ந்த படிப்புகள் என துறைதோறும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

அடுத்ததாக +2 பாடங்களில் நீங்கள் விரும்பிய படித்த பாடம் எது என்றும், எந்த பாடத்தில் அதிக மதிப்பெண் பெறமுடியும் என்றும் சிந்தித்து அதன் அடிப்படையில் பட்டப்படிப்பினை தேர்வு செய்வது சிறந்ததாகும். பெரும்பாலான மாணவ-மாணவியர்கள் தாங்கள் டாக்டராகவோ, பொறியாளராகவோ வரவேண்டும் என்று விரும்புகின்றனர். அனேக பெற்றோர்களின் எண்ணமும் அதுவாகத்தான் இருந்து வருகிறது. இத்தகைய எண்ணங்கள் மட்டும் இருந்தால் போதாது. அதற்கான விடா முயற்சி தேவை என்பது அவசியம் தேவை.

வழக்கமான பாதையில் படிப்பினை தேர்வு செய்ய வேண்டாம். எனவும், புதிய துறைகளைத் தேர்வு செய்ய விரும்பும் மாணவர்களும் இருக்கிறார்கள். அத்தகைய மாணவர்களுக்கு அதற்கேற்ப பல்வேறு விதமான படிப்புகளும் இருக்கின்றன.

## மருத்துவப் படிப்புகள்

இளநிலை மருத்துவம், பல் மருத்துவம், ஹோமியோபதி, ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம், யோகா மருத்துவம், நேட்ரோபதி மருந்தாளுநர், பேச்சுதெரபி, நர்சிங், பிசியோதெரபி, ஆக்குபேசனல்தெரபி, ஆப்தல்மொலாஜி, ரேடியாலஜி, லேபாரட்டரி, மற்றும் டெக்னிக்கல் ஆகியவை ஆகும்.

## கலை வழி படிப்புகள்

விளம்பரத் துறை, தொழில் மேலாண்மை, ஆசிரியர்பணி, ஆங்கிலம், புவியியல், வரலாறு, உளவியல், சமூகவியல், அக்கவுண்டசி, நுண்கலைப்படிப்புகள், சட்டம், நூலகஅறிவியல் மற்றும் தகவல் அறிவியல், மனையியல் அறிவியல், இதழியல், ஊட்டச்சத்தியல் மற்றும் கட்டுப்பாட்டியல், வடிவமைப்பு, பேஷன் தொழில் நுட்பம்

## டிப்ளமோ படிப்புகள்

திரைப்படத் தொழில் நுட்பம், ஓவியம், நடனம், இசை, பன்மொழிப் படிப்பு, இதழியல், விளம்பரம், மறுவாழ்வுப் படிப்புகள், ஆசிரியர் பணி, நுண்கலைப்படிப்புகள் ஆகியவை ஆகும்.

## வணிகவியல் வழி

தொழில் நிர்வாகஇயல், வணிகவியல், பொருளாதாரஇயல், தொழில் மேலாண்மை ஆகியவை ஆகும்.

## புரொபசன் டிரெயினிங்

சார்டர்ட் அக்கவுண்டன்சி, காஸ்ட் அண்டு ஒர்க்ஸ் அக்கவுண்டன்சி, தொழிலகச் செயலர் ஆகியவை ஆகும்.

## டிப்ளமோ கோர்ஸ்

அக்கவுண்டன்சி, வங்கி மேலாண்மை ஆகியவை ஆகும்.

நுண்கலைப்படிப்புகள், பேஷன் டிசைனிங், விளம்பர துறை, ஜர்னலிஜம் ஃபிலிம் டெக்னாலஜி போன்ற படிப்புகள் ஏராளம் பயிற்றுவிக்கப்படுகிறது.

## இந்திய குடிமையியல் தேர்வுகள்

முழுமையான கவனத்துடன் படித்து, கடின முயற்சி செய்யும் மாணவர்கள் யாரானாலும் இந்திய குடிமையியல் தேர்வுகளை எழுதலாம். ஏராளமான மாணவர்கள் அரசுத்துறையில் உயர் பதவிகளைக் கொடுக்கும், இத்தகைய தேர்வுகளை எழுதமுடியுமா என சந்தேகிக்கின்றனர். இது தவறான எண்ணமாகும். ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்த மாணவர்கள் அனைவருமே இத்தேர்வுகள் எழுதத்தகுதி உடையவர்கள் ஆவர்.கடின உழைப்பும் விடாமுயற்சியும் உடைய மாணவர்கள் இத்தகைய தேர்வுகளில் எளிதில் வெற்றி பெற முடியும்.

## தேர்வு முறை

குடிமையியல் தேர்வு 3 பிரிவுகளைக் கொண்டது.

1. முதல்நிலைத் தேர்வு 2. முதன்மைத் தேர்வு 3. நேர்முகத் தேர்வு.

## விண்ணப்பிக்கும் முறை

இத்தேர்விற்கான அறிவிப்பு எம்பளாய்மெண்ட் நியூஸ் மற்றும் அனைத்து பத்திரிக்கைகளிலும் டிசம்பர் மாதத்தில் அறிவிப்பு வெளிவரும். அனைத்து தலைமை அஞ்சலகங்களிலும் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம்.

**வேளாண்மை படிப்பு**

இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களில் 50 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

**அறிவிப்பு**

தமிழக அரசு ஆணைப்படி நுழைவுத்தேர்வுகள் ரத்தாகியுள்ளது. ஆகவே பன்னிரெண்டாம் வகுப்பில் எடுத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

**நமது இலக்கு**

ஒரு படிப்பை தேர்வு செய்யும்போது நீங்கள் நம்பிக்கையோடு இருக்க வேண்டும் அந்த படிப்பை படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு சிந்தித்து ஆலோசனைகளை கேட்டுக் கொள்ளலாம். குறிப்பிட்ட பாடப்பிரிவினை தேர்வு செய்வதற்குமுன் சிலவிசயங்களை மனதிற் கொள்ளவேண்டும். அடுத்தவர்கள் அறிவுரை சொல்கிறார்கள் என்பதற்காக சிரமமாக இருக்கும் படிப்பைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. எதைப்படித்தால் உடனே வேலை கிடைக்கும் என்ற கண்ணோட்டத்தில் படிப்பினைத் தேர்வு செய்யக் கூடாது. எதைப்படித்தால் நீண்ட காலத்துக்குப் பயன்கிடைக்கும் என்ற நோக்கத்துடன் தேர்வு செய்யவேண்டும். நன்கு படித்து நல்ல மதிப்பெண்கள் எடுத்து நல்ல கல்வியை தேர்ந்தெடுத்து நலமாக வாழ உளமார வாழ்த்துகிறேன்.